6th September 1960]

SRI S. LAZAR : Sir, this kind of delay is being very much felt by the public. It has also been realised by the party. Even in the recent All-India Congress Session at Bangalore a decision was taken. May I know whether, pursuant to the decision, any further step was taken by the Government or whether at least any committee was appointed to go into the question of reducing delay in the disposal of Government business?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. The matter is engaging the attention of the Government. I had a detailed discussion with all the Members of Board of Revenue and the Secretaries and the heads of departments. I asked them to express their views frankly and to suggest ways and means to see that there is expeditious disposal of Government business. We had a very general discussion. We have formed a small committee consisting of some of the Board Members, some of the Secretaries and they are considering the whole thing. I hope to get a report from them.

Seepage (Mettur)

* 468 *Q.*—SRI P. G. MANICKAM :
SRI K. R. NALLASIVAM : } கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மேட்டூர் வாய்க்கால் வலதுகரை பாசன பிரதேசத்தில் கோயமுத்தூர் ஜில்லா, பவானி தாலுகாவிலுள்ள, நீர் கசிவினாலே பாதிக்கப்பட்ட சேரிகளின் ஜாபிதா ஒன்று ஸ்தல எம்.எல்.ஏ-க்கள் மூலமாக ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes, Sir.

(ஆ) The lists were forwarded to the Collector of Coimbatore with instructions to expedite the rehabilitation proposals and to settle all such cases after obtaining reports promptly from the subordinates. The Collector has also been asked to submit progress reports to Government every month in this regard.

SRI P. G. MANICKAM : சட்டசபை மெம்பர்களாகிய நாங்களும் இங்கே வந்த பிறகு கடந்த நான்கு வருஷங்களாக இதுபற்றி ஏராளமான விண்ணப்பங்களும் அனுப்பியிருந்தும் இதுவரைக்கும் ஐந்து சேரிகளுக்குத்தான் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இருபது, இருபத்தைந்து சேரிகளுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஸ்பெஷல் தாசில்தாரின் ஆறு மாத கெடுகாலம் கூட முடியப்போகிறது. ஆகவே இந்தத் திட்டம் வெகுசீக்கிரம் முடிவு அடைவதற்கு தனித்திட்டமாவது வகுப்பதுபற்றி யோசனை செய்யுமா ?

[6th September 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : இதிலே குறிப்பிடப் பட்ட கிராமங்கள் 21. இந்த கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த தகவல் என்னிடம் இருக்கிறது. ஏதாவது ஒரு கட்டத்தில் அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வருகிறது.

SRI K. R. NALLASIVAM : மேட்டூர் கால்வாய், கீழ் பவானி கால்வாய் ஆகிய இரண்டு பகுதியிலுமாக உள்ள சேரிகளில் நீர்க் கசிவு காரணமாக ஏற்படுகிற இன்னல்களைப்போகக ஐந்தாறு ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்டு வந்தும் கூட வருஷத்துக்கு நான்கைந்து சேரிகளுக்குத்தான் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. துரிதமாக இதை நிறைவேற்ற விசேஷ நிதி, திட்டம் ஏதாவது வகுப்பதற்கு யோசனை செய்ய முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏதாவது ஒரு நட வடிக்கை எடுக்கப்படுகிறது. ஓரிடத்தில் நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓர் இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்ய நோட்டிபை பண்ணப்பட்டிருக்கிறது. இப்படி ஏதாவது ஒரு நடவடிக்கை எல்லா இடங்களிலும் எடுத்துக்கொள்ளப் பட்டுத்தான் வருகிறது.

SRI G. G. GURUMURTHI : ஹரிஜன சேரிகள் மட்டும் அல்லா மல், மிகவும் பின் தங்கிய கிராமங்களில் உள்ளவர்களுக்கும் பரிகாரம் காண அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்த எந்தப் பகுதி யிலே நீர் கசிவு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

Pumpsets

* 469 *Q*.—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா ஈரோடு தாலுகாவிலுள்ள காலிங்க ராயன் வாய்க்கால் வலதுபக்கப் பாசனப் பகுதியில் இறவைப் பாசனத்திற்கு அனுமதி பெற்றுள்ள நிலங்களில் பம்ப் செட் வைத்துத் தண்ணீர் இறைத்துக் கொள்வது பற்றி, சம்பந்தப்பட்ட விவசாயிகள் முறையீடுகள் ஏதேனும் செய்து கொண்டார்களா ?

(ஆ) அதன் மீது சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under the consideration of the Government.